அரசியல் சட்டத்திற்கு ரண சிகிச்சை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 29௳ வெள்ளி (13—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 30௳ சனி (14—8—54) | இதழ்: 52

புதிய 'மகா பாரதம்' உருமாறுகிறது!

இராஜ்யங்களின் கோரிக்கை பரிசீலனைக்கு உட்படும்!

புனரமைப்பு கமிஷனின் தீர்ப்புக்கு ஏற்ப திருத்தம்!

நீதிமன்ற தீர்ப்புகள், நிர்வாகக் குறைபாடுகள் ஆராயப்படும்!

★

இந்திய உப கண்டத்திற்கென்று காங்கிரஸ் சர்க்கார் தயாரித்துள்ள அரசியல் சட்ட விதி முறைகள் பல, நீதிமன்றங்களின் முன்பு பயனற்றதாகி, செத்து மடிந்துகொண்டிருப்பது சாதாரண நிகழ்ச்சியாய் விட்டது!

சில சமயங்களில், நாட்டு மக்களுக்கென்று அளிக்கப்பட்டிருக்கும் ஒரு சில உரிமைகளைப் பறிக்கவும், பேச்சு, எழுத்து சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தவும்கூட காங்கிரஸ் ஆட்சியினர், அந்தச் சட்ட விதி முறைகளின் மறைவில் நின்று முயன்று வருகின்றனர்.

எனவே, பெரியதோர் 'மகாபாரதமாக'க் காட்சியளித்து வருவதும், பல முறை திருத்தப்பட்டதுமான இந்திய அரசியல் சட்டம் மீண்டும் ரண சிகிச்சைக்கு உட்படுகிறது.

அடுத்துவரும் பாராளுமன்றக் கூட்டத்தில் இதற்கான மசோதாக்கள் கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

இந்திய அரசியல் சட்டம் இரண்டு கட்டங்களில் திருத்தப்படுமென்று நம்பப்படுகிறது.

இந்திய உப கண்டத்து நீதிமன்றங்கள் அளித்துள்ள தீர்ப்புகளை ஒட்டியும், அரசியல் சட்டத்தை அமுல் செய்வதில் இராஜ்ய, மத்திய அரசாங்கங்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்வாகக் குறைபாடுகளைப் போக்கவும், முதலில் திருத்தங்கள் செய்யப்படுமாம்.

வரி விசாரணைக் கமிஷனின் சிபாரிசுகள் வெளியிடப்பட்டதும், 'ரண சிகிச்சை'யின் அடுத்த கட்டம் நடைபெறும்.

வரி விசாரணைக் கமிஷன் செய்யும் சிபாரிசுகளின்படி, வரி விதிப்புக்கான முறைகளை அமுல் செய்ய அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியமாகிவிடும் என்று நம்பப்படுகிறது.

அது மட்டுமின்றி, இராஜ்ய புனரமைப்புக் கமிஷனின் சிபாரிசுகளை நிறைவேற்றவும், டில்லி சர்க்கார் இந்திய அரசியல் அமைப்பைத் திருத்துவது அவசியமாக இருக்குமென்று கருதப்படுகிறது.

அரசியல் அமைப்பின் நடைமுறை குறித்தும், அதனைத் திருத்த வேண்டிய அவசியம் குறித்தும் இராஜ்ய அரசாங்கங்கள் டில்லி சர்க்கார் முன்பு வைத்துள்ள பிரச்சினைகளை ஆராயவும் இந்திய மந்திரி சபையின் உயர்தர உப கமிட்டி ஒன்று அமைக்கப்படுகிறது.

பண்டித நேரு, டாக்டர் கட்ஜு, சி. சி. பிஸ்வாஸ் மற்றும் பலர் அக்குழுவில் இருப்பார்கள் என்று தெரிகிறது.

மொராக்கோ 'பொம்மை' சுல்தான் வெளியேற்றம்!

பிரெஞ்சு ஆதிபத்தியம் சரியும் காட்சி!

ஈத் பண்டிகை புறக்கணிப்பு

அரபியர் லட்சியம் சித்திக்கிறது!

சான்செபாஸ்டியன், ஆக 13—

பிரெஞ்சு ஏகாதிபத்தியம், மொராக்கோவில் உள்ள புதிய சுல்தானை நீக்கிவிட்டு, தாங்கள் சென்ற ஆண்டில் துரத்தியடித்த பழைய சுல்தானின் மகனுக்கே, மொராக்கோவின் 'சிம்மாசனத்'தைத் தந்துவிட முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

இதற்குக் காரணம், ஸ்பெயினுடனும், பிரெஞ்சு மொராக்கோ எதிர்ப்பாளர்களுடனும் ஒரு சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென பிரான்ஸ் நினைப்பதே யாகும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தத் தகவலை ஸ்பானிஷ் வெளிநாட்டு மந்திரி மார்ட்டின் ஆர்டாஜோ, ஸ்பானிஷ் சட்டசபையில் வெளியிட்டதாகவும் தெரிய வருகிறது.

விழா புறக்கணிப்பு

ரபாட், ஆக. 12—

மொராக்கோவிலுள்ள லட்சக் கணக்கான அரபியர்கள், கடந்த செவ்வாயன்று நடைபெற்ற வருடத்தில் முஸ்லிம்களின் மிகப் பெரிய ஈத் பண்டிகையை கொண்டாடாமல் புறக்கணிக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

"மொராக்கோவில் சுதந்திரம் பறிக்கப்பட்டிருப்பதற்கு வருத்தம் தெரிவிக்கும் முறையில், இந்த ஈத் பண்டிகையை மொராக்கோவில் தேசப்பற்றுடையவர்கள் எல்லாம் கொண்டாடாது புறக்கணிக்க வேண்டும். இந்த நாளை ஒரு துக்க நாளாகக் கருத வேண்டும்," என்று தீவிர தேசியவாதிகள் உத்தரவிட்டிருந்தனராம்.

"பரம்பரையாக செய்து வரும், ஆடு குர்பான் செய்த தியாகத்தின் நினைவாக, ஆடு வெட்டுதலை யாரேனும் மேற்கொண்டால், அவர்கள், தலை வேறு, முண்டம் வேறாக தங்கள் கையில் உள்ள கத்தியாலேயே துண்டாடப்படுவார்கள்," என, பயங்கரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனராம்!

ஒரு ஆடு, தலை வெட்டப்பட்ட காட்சியும், அதன் அருகே, ஒரு தலையில்லாத மனித முண்டமும் கொண்ட சித்திரங்கள் வரையப்பட்ட 'போஸ்டர்'கள் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்ததாம்!

வருடந்தோறும் சுமார் 6,000 ஆடுகள் அந்தத் தினத்தில் வெட்டப்படுவது வழக்கமாம்! ஆனால், இந்த ஆண்டு ஒரு ஆடு கூட விற்கப்படவில்லை. கடைகளே பூராவும் அடைக்கப்பட்டிருந்தனவாம்!

பண்டிகை, அநேகமாக மொராக்கோ முழுவதும் பூரணமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

சுல்தானின் அரண்மனைக்குள் மட்டும் சிலர், சுல்தானுடன் பலத்த பாதுகாப்புடன் பண்டிகையைக் கொண்டாடியுள்ளனர்.

"பழி வாங்கும் காலம்" என்று தேசிய வாதிகள் குறிப்பிட்டிருக்கிற இந்த ஆகஸ்ட் மாதத்தில், கடந்த பத்து நாட்களில் ...

கோவாவில் அடக்குமுறை

13,000 பேர் வெளியேற்றம்!

பெல்காம், ஆக. 12—

கோவாவிலிருந்து 13,000-க்கு மேற்பட்ட தொழிலாளர் இந்தியா வந்து சேர்ந்திருக்கின்றனர். இந்திய எல்லைக்கு வரும் ஒவ்வொரு வண்டியிலும் ஏராளமான தொழிலாளர்கள் வந்துகொண்டேயிருக்கின்றனர். இவர்களது சம்பளத்தையோ, கூலியையோ கொடுக்காமல், கோவா சர்க்கார் இவர்களைத் திருப்பி அனுப்புகிறதாம்!

... மட்டும் 316 பேர்களுக்கு பலத்த தாக்குதல் ஏற்பட்டுள்ளது. அவர்களில் பலர் மாண்டுவிட்டனர். இன்னமும் அந்தக் கலகம் முடியும் கட்டத்தை நெருங்கவில்லை எனத் தெரிகிறது.

மொராக்கோவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம், காரணம், சென்ற ஆண்டு, மொராக்கோவின் சுல்தானை பிரெஞ்சு ஏகாதிபத்திய வாதிகள் நீக்கிவிட்டு தங்கள் கைப்பாவையான ஒருவரை சுல்தானாக நியமித்தனர், அதை எதிர்த்து, மொராக்கோ மக்கள் தொடர்ந்து கிளர்ச்சியிலீடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

திரு—தமிழர் பிரச்சினை:

அறப்போர் தளபதி கைது

காந்திராமன் உண்ணாவிரதம் நிற்கும்

மாணவர்களுக்கு நேசமணி வேண்டுகோள்

திருவனந்தபுரம், ஆக. 12—

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அறப்போரின் 'சர்வாதிகாரி' தோழர் குஞ்சன் நாடார் எம்.எல்.ஏ., திரு—கொச்சி போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

பலாத்காரத்தைத் தூண்டியதாகவும், சட்டத்தை மீறியதாகவும், கலகம் செய்யத் தூண்டியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்படும் என்று தெரிகிறது.

இச்செய்தியைக் கூறிய திரு-கொச்சி சர்க்காரின் அறிக்கை ஒன்று, தென் திருவாங்கூரில் அமைதி நிலவுகிறது என்று கூறுகிறது.

குழித்துறையில் மட்டும் 50 தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

ஆர்ப்பாட்ட நேரங்களிலும் அதற்கு முன்பும் மிகவும் சுறுசுறுப்புடன் காணப்பட்ட கம்யூனிஸ்டு தலைவர்கள் பலர் இப்போது தலை மறைவாகி விட்டனராம்!

அறுத்தெறியப்பட்ட தந்தி, டெலிபோன் செய்தி போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகி விட்டதாம்!

புதுக்கடையில், அஞ்சல் நிலையமொன்று தாக்கப்பட்டு பணப் பெட்டி உடைக்கப்பட்டதாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

பிரெஞ்சிந்திய பிரச்சினை:

அதிகார மாற்றம் நிச்சயம்தானாம்!

பேச்சுவார்த்தைகள் தொடருகின்றன

புதுடில்லி, ஆக. 12—

பிரெஞ்சுப் பிடியில் உள்ள புதுவை காரைக்கால் பகுதிகளை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைப்பது பற்றி பிரான்ஸ் இந்திய அரசாங்கங்களிடையே தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் ஒற்றுமை இருநாடுகளிடமும் இருப்பதாகவும் ஆகவே, அவை வெற்றிகரமாக முடியக்கூடும் என்றும் தெரிய வருகின்றது.

எந்த நிமிடமும், அதிகார மாற்றத்திற்கான அறிவிப்பு பாரிசிலிருந்து வரக்கூடும் எனத் தெரிகிறது.

அந்த அறிவிப்பு வெளிவருவதில் சிறிது காலதாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாயிருப்பினும், பிரெஞ்சுப் பகுதிகளை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைப்பது பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எகிப்து பிரதமர் கராச்சி வருகிறார்

கராச்சி, ஆக. 12—

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு எகிப்து பிரதமர் நாசர் பாகிஸ்தான் வர ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

நம் நாடு
திராவிடத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—8—54 வெள்ளி

களம் சிவப்பேறுகிறது!

நாஞ்சில் பகுதியில் நடைபெறும் தமிழர்தம் உரிமைப் போராட்டத்தின்மீது, பட்டம் தாணுப் பிள்ளையின் அரசாங்கம் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது!

அறப்போரை எப்படியேனும் அடக்கிவிட வேண்டுமென்ற வெறியில், அதிகாரத்தின் ஆணவப் போக்கு உச்ச நிலையடைந்துவிட்டது!

ஆகஸ்டு 11-ந் தேதி, திரு-கொச்சியில் சிக்குண்டிருக்கும் தமிழகப் பகுதிகள் "விடுதலை நாள்" கொண்டாடின; அந்த விடுதலை நாளின்போது மார்த்தாண்டம் என்ற பகுதியில் கூடியிருந்த கூட்டத்தினர் மீது, திருவாங்கூர்—கொச்சி அரசாங்கத்துப் போலீஸ் படை வரிசை துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது; இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது; நான்கு உயிர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன!

தமிழர்தம் அறப்போர் ஆக்கமடைவதைக் கண்ட பட்டம் தாணுப் பிள்ளை, அடக்குமுறைகளை ஒவ்வொன்றாகப் போட்டுப் பார்த்தார்—முதலில் 144 தடை; வழக்கு; அபராதம்; சிறைத் தண்டனை; தடியடி—இப்படி ஒவ்வொன்றாக—அடக்குமுறைப் பாதையின் அதிகார வெறி பிடித்தலைபவன் நடந்துசெல்கிற ஒவ்வொரு கட்டமாகத் தாண்டி, இப்பொழுது துப்பாக்கிக் குண்டுகளை வீசி நான்கு உயிர்களைப் பலி கொண்டுவிட்டார், 'விடுதலை நாளில்'—அறப் போராட்டத்தில், நான்கு உயிர்கள் பலி பீடத்தில் 'காணிக்கையாக' வழங்கப்பட்டுவிட்டன!

"அறப்போர் பலாத்காரமாக உருவெடுக்குமானால் அடக்கியே தீருவோம்" என்று பட்டம் தாணுப்பிள்ளை அவசியமற்ற முறையில் எச்சரிக்கை விடுத்தபொழுதே அறப்போர் வளருமானால், அதைக் கடுமையான அடக்குமுறைகொண்டு அழித்துவிடவே அவர் திட்டமிடுகிறார் என்று நாம் அறிவித்தோம். அந்த வகையில்தான், பலாத்காரம் என்ற காரணத்தைக் காட்டி, அறப்போரை அழிக்க பட்டம் தாணு துப்பாக்கி முனையை நீட்டியிருக்கிறார்.

அறப்போர் வீரர்கள் மீது குண்டுகள் பாய்ச்சப்பட்டிருக்கின்றன! மண்ணில் இரத்தம் பாய்ச்சப்பட்டிருக்கிறது! போர்க் களம் சிவப்பேறியிருக்கிறது!

அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதால், சிறைச்சாலைகளை நிரப்பிவிடுவதால், துப்பாக்கிக் குண்டுகளைப் பாய்ச்சுவதால், மக்களிடையே எழும்பும் எழுச்சியை—அவர்கள் உள்ளத்தில் வேர்விட்டு ஊன்றியுள்ள உரிமை வேட்கையை அடக்கிவிடலாம் என்று திருவாங்கூர்—கொச்சி முதலமைச்சர் திட்டமிடுவாரேயானால், அது அவருக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளிக்கும்.

அடக்குமுறையும் சிறைச்சாலையும் எந்த ஆணவ ஆட்சியையும் காப்பாற்றியதில்லை; மாறுகச் சரிந்துவரும் அதிகாரத்தை வேகமாகக் கீழே இழுத்துவர அவை பயன்பட்டிருக்கின்றன.

இட்லர், முசோலினி போன்ற பெரும் சர்வாதிகாரிகள், அதிகார பலமனைத்தையும் பெற்று, ஐரோப்பா கண்டத்தையே தம் இரும்பு மிதியடியில் அமுக்கி, அடக்குமுறையின் அளவுகளை எல்லாம் அவற்றின் உச்சநிலைக்கு உயர்த்தியபோதிலும், ஆங்காங்கு எழுந்த உரிமை வேட்கை—மக்களின் எழுச்சி அடக்கப்படவில்லை. கடைசியில், அடக்குமுறையின் காவலர்களாக விளங்கியவர்கள்தான் அழிந்துவிட்டார்கள்!

எதேச்சாதிகாரிகள் முயன்று பார்த்து முடியாது விட்ட இடத்தில், சர்வாதிகாரிகள் திட்டமிட்டுத் தோற்றுப்போன இடத்தில், பட்டம் தாணுப் பிள்ளை எக்காளமிட்டு குதிக்கிறார். பாவம்! அந்த சர்வாதிகாரிகளாவது முதலில் அதிகார பலமனைத்தையும் கைப்பற்றி, பின் அடக்குமுறையில் இறங்கினர். பட்டம் தாணுப் பிள்ளை அரசியல் பலமற்றவர்; மிகச் சிறுபான்மை கட்சியினர்; காங்கிரஸ் தாட்சண்யத்தால் அரசாங்கத்தில் இடம் பெற்றிருக்கிறார். அவர் கொக்கரிக்கிறார்; குதிக்கிறார்; துப்பாக்கி முனையைக் காட்டி எக்காளமிடுகிறார்!

அடக்குமுறையைக் கடுமையாக்குவதன் மூலம், தமிழர்தம் அறப்போரை அழித்துவிடலாமென்று பட்டம் திட்டமிடுவாரானால், அவருக்கு நெடுநாளைக்கு முன்னைய வரலாறு அல்ல, அயல்நாட்டுச் சம்பவங்களையல்ல, அவருடைய அரசுக்குப் பக்கத்திலிருந்து, அடக்குமுறையாலேயே எல்லாவற்றையும் சமாளித்துவிடலாம் என்று மனப்பால் குடித்து, பின்னர் அரசிழந்துபோன ஆச்சாரியார் கதையை கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறோம். பட்டம் தாணுப் பிள்ளையைவிட அதிகமான அளவில்தான், ஆச்சாரியார் அடக்குமுறையை வீசினார்; தண்டனைகளைத் தந்தார்; சிறைச்சாலைகளை நிரப்பினார்; துப்பாக்கிகளை உபயோகித்தார். பட்டம் தாணுப் பிள்ளையின் அடக்குமுறையினால், மார்த்தாண்டத்தில் நான்கு பிணங்கள் விழுந்தனவென்றால், அதைவிட இரண்டு அதிகமாக—ஆறு பிணங்கள் ஆச்சாரியார் அடக்குமுறையின் கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் விழுந்தன. 'அறப்போரை எப்படியேனும் அடக்கியே தீருவேன்,' என்று பட்டம் சங்கநாதம் செய்வதுபோல்தான், ஆச்சாரியாரும், 'மும்முனைப் போர்முகத்தின் போராட்டத்தை அடக்குவேன்; அவர்களது கணக்கைத் தீர்த்துக் கட்டுவேன்' என்று வீராப்பு பேசினார்!

கடைசியில் நிகழ்ந்தது என்ன? உரிமைப் போராட்டம் ஒடுங்கவில்லை; ஆச்சாரியார் தானெடுத்த அடக்குமுறை ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டு, அரசைவிட்டு ஓட நேர்ந்தது. இப்பொழுது போகும் போக்கில் பட்டம் தாணுப் பிள்ளைக்கும் அந்த கையறு நிலையே நேரிடும்!

துப்பாக்கிக் குண்டுகளைப் பாய்ச்சிவிடுவதால், அறப் போராட்டத்தை சாய்த்துவிட முடியாது. நான்கு பிணங்கள் விழுந்தன—ஆனால் ஆயிரக்கணக்கில் வீரர்கள் களத்தில் நிற்பார்கள்!

துப்பாக்கியின் சத்தத்தால் உரிமையின் குரலை அடக்கிவிட முடியாது!

பட்டம் அரசாங்கத்தின் அடக்குமுறை, தமிழர்தம் உரிமையை அழித்துவிடாது!

வீழ்ந்த வீரர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. அவர்கள் சிந்தி உழைத்த அறப்போராட்டம் வெற்றி பெறுவது திண்ணமென உறுதி கூறுகிறது.

பட்டம் தாணு பிள்ளையின் பதட்டத்தால், அறப்போர் வீரர்களின் இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது! சிந்திய இரத்தத்தால் களம் சிவப்பேறியிருக்கிறது! சிவப்பேறிய களம்—அடக்குமுறையை விரைவில் அழிவு அணைத்துக் கொள்ளும் என்பதற்கான அபாய அறிவிப்பாக இருக்கிறது! அபாய அறிவிப்பை பட்டம் தாணு பிள்ளை உணர்வாராக!

தஞ்சையில் சர்க்கரை ஆலை

தஞ்சை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை ஒன்றைத் திறப்பதற்கு சர்க்கார் அனுமதி தந்திருப்பதாக, விவசாய மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் அறிவித்தார்.

அந்த சர்க்கரை ஆலையில் நாள்தோறும் 1,000 டன் கரும்பு அரைக்க முடியும் என்றும், அந்த ஆலைக்குத் தேவையான கரும்பு உற்பத்தி செய்ய 4,000 ஏகர் நிலம் தேவைப்படும் என்றும் தெரிகிறது.

திருச்சியில் ஏற்படுத்துவதற்குப் பதிலாக ஏற்படுத்தப்படுவதல்ல இது என்றும், சென்னை மாநிலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 90,000 டன் சர்க்கரை தேவை என்றும் அதில் இப்போது, 43,000 டன் மட்டுமே உற்பத்தியாவதாகவும் மந்திரி அறிவித்தார்.

சர்க்கரை ஆலைக்கு அனுமதி தந்திருப்பதினால் நெல் விளைச்சல் பாதிக்கப்படாதா என்று கேட்கப்பட்டபோது ஏற்கனவே 2000 ஏகர் நிலம் தஞ்சையில் கரும்பு சாகுபடிக்காக உபயோகத்திலிருப்பதினால் நெல் விளைச்சல் ஒன்றும் பாதித்துவிடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராஜிநாமா செய்தார்

சென்னை முன் மந்திரி எனம் நாமாசசர், சமீபத்தில் குடியேற்றத்தில் நடைபெற்ற தேர்தலில் சென்னை சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதை ஒட்டி, தான் ஏற்கனவே வகித்து வந்த மக்கள் சபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார் என்று தெரிகிறது.

நடப்பு ஆண்டில் புகையிலைச் சாகுபடி விஸ்தீரணம் 8,70,000 ஏகராவும், உற்பத்தி 2,50,000 டன்னுமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

மொராகோவிற்கு விடுதலை?

அராபியர் 'கிளர்ச்சி'யின் விளைவு!

காலனிக் கொள்கையின் காலம் கடந்துவிட்டது!

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் தெளிவு பெறுகிறது!

பாரிஸ், ஆக. 10—

பிரெஞ்சுப் பிடியிலிருக்கிற மொராக்கோ பற்றிய விவாதம் பிரெஞ்சு தேசிய சட்ட சபையில் நடைபெற்றது.

இன்று நடைபெறத் துவங்கியுள்ள மதத் திருவிழாக்கள் முடிவுற்றதும் இந்த மொராக்கோ பிரச்சினைக்கு ஒரு திட்டவட்டமான முடிவுகளை அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக, மொராக்கோ—டேனிசிய மந்திரி சட்ட சபையில் அறிவித்தார்.

ஆனால் அரசாங்கத்தின் பார்த்த அந்தத் திட்டம், மொராக்கோவில் பூரண அமைதி நிலவினால்தான் அமுலாக்கப்பட முடியும் என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

சென்ற மாதத்தில், 'டேனிசியாவுக்கு சுயாட்சி' என்ற பிரகடனத்தை பிரெஞ்சுப் பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ் வெளியிட்டிலிருந்து, நாடுகடத்தப்பட்ட சிதி முகம்மது பென் யூசுப் என்ற முன்னாள் சுல்தான், நாடு திரும்பவேண்டும் என்ற கோரிக்கையை மையமாகக் கொண்டு எழுந்த அமைதியின்மை, கலகம், இதுவரை 40 பேர்களின் உயிரைப் பலி கொண்டுள்ளது.

பிரெஞ்சுப் பிரதமர் மேலும் தேசிய சட்டசபையில் பேசுகையில் டேனிசியா பற்றிய அரசாங்கத்தின் கொள்கைக்கும் மொராக்கோவில் நடைபெறுகிற கிளர்ச்சிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் மொராக்கோவில் நடைபெறும் படுகொலைகளை அடக்க, எல்லாவித கடும் நடவடிக்கைகளை எடுக்கவும் அரசாங்கம் தயங்காதென்றும் கூறியிருக்கிறார்.

மொராக்கோவிற்கு, நிர்வாகப் பொறுப்புத் தருவதின் மூலம் அதை ஒற்றுமைப் படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து அவர், தன் தேசத் தலைவருக்கு அறிவுரை கூறுகிற வகையில், குறிப்பிட்டதாவது:—

"எப்பொழுதோ செய்யப்பட்டிருக்க வேண்டிய பெரும் சீர்திருத்தங்களை இன்னமும் செய்யாது ஒத்திப் போடுவதற்கு ஒரு நொண்டிச் சமாதானமாக, இன்றுள்ள வருந்தத்தக்க சூழ்நிலைகளைக் கொள்ளக் கூடாது. மேலும், மிகப் பழமையான, காலனிக் கொள்கை அழிவுக் கட்டத்தை நெருங்கிவிட்டது என்பதையும் மறக்கலாகாது."

தமிழை ஆட்சி மொழியாக்க வலியுறுத்தல்

முதலமைச்சருடன் தமிழர் பேரவை தூதுக் குழு பேட்டி

தமிழர் பேரவையின் செயற்குழுவின் தீர்மானத்திற்கிணங்க, 9—8—54 பகல் 1 மணிக்கு சென்னை முதலமைச்சர் கே. காமராஜ் அவர்களை, பத்து பேர் அடங்கிய தூதுக்குழு ஒன்று திரு. சுதபதி எம்.எல்.சி. தலைமையில் பேட்டி கண்டது. தூதுக் குழு அடியில் காணப்படும் விண்ணப்பத்தை அவரிடம் தந்தனர்:—

1. நான்கு ஆண்டுகளுக்கு முன் சென்னை அரசாங்கம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழிலும், கிழக்குக் கோதாவரி மாவட்டத்தில் தெலுங்கிலுமாக முறையே ஆட்சி மொழியாக வைத்து பரிசோதனை செய்தது.

2. 1—10—53-ல் ஏற்பட்ட ஆந்திர மாகாண பிரிவினைக்குப் பின், அப்புதிய மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் தெலுங்கையே ஆட்சி மொழியாகக் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

3. தமிழ் மாவட்டங்களில் எல்லாம் தமிழையே எல்லாத் துறைகளிலும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

4. ஒரே தடவையில் தமிழைத் தமிழ் மாவட்டங்களில் ஆட்சி மொழியாக்குவதில் நடைமுறையில் ஏதேனும் சிரமம் ஏற்படுமானால், செங்கல்பட்டு, தென்னாற்காடு, சேலம் என்ற மூன்று தமிழ் மாவட்டங்களிலாவது உடனடியாகத் தமிழை ஆட்சி மொழியாக நடத்தும் பகுதிகளாக எடுத்துக் கொள்ளலாம்.

5. திருச்சிராப்பள்ளியில் தமிழை ஆட்சி மொழியாக்கியதில் வெற்றி கிடைத்திருக்கிறது; புகழ் அடைந்தும் வருகிறது; ஆனால் மாவட்ட அதிகாரிகளுக்குத் தமிழில் சரளமாக பேச முடியாததால், அவர்களுக்கு உதவியாகப் பலசித முக்கிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ஆகவே, இத்தமிழர் பேரவையின் தூதுக் குழுவினர், எல்லா தமிழ் மாவட்டங்களிலோ அல்லது மேற்சொன்ன மூன்று மாவட்டங்களிலோ தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்துகின்றனர். மேலும் அரசாங்கம், தமிழ்க் கையச்சுப் பொறி, தமிழ் அறிந்த அதிகாரிகளை நியமித்தல், கணக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழில் பயிற்சியளித்தல், தமிழ் சுருக்கெழுத்தில் தேர்ச்சி கொள்ளச் செய்தல் அலுவலகங்களுக்குப் பயன்படும் அச்சடித்த தாள்களை உதவுதல், எல்லா சட்டங்களையும் உத்தரவுகளையும் தமிழில் கொண்டு வருதல் முதலியவற்றை செய்து தமிழில் ஆட்சி நடைபெறுவதை வெற்றியடையச் செய்யவேண்டுமாய்க் கோருகிறது.

முதலமைச்சர் காமராசர், இதைக் கவனித்து ஆவன செய்வதாகக் கூறினார்.

* * *

8—8—54 காலை 10 மணிக்கு சென்னை பிராட்வே 2/140 என்னுள்ள கட்டிடத்தில் திரு ஆ. கசபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திரு—கொச்சி தமிழ் மக்கள் போராட்டத்தை வரவேற்றும், போராட்ட நிலையினை நேரிற் கண்டறிய குழு ஒன்றை நிர்ணயித்தும், திருப்பதி கீழ்க் கலைக் கல்லூரியில் தமிழ் வித்துவான் பட்டம் பெறப் படிக்கவரும் தமிழ் மாணவர்கட்கு ஏற்பட்டுள்ள பட்ட மாறுதல், இட மாறுதல் தொல்லைகளை உடனே நீக்கவேண்டுமென சென்னை, ஆந்திர அரசாங்கத்தையும் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் நெடுஞ்செழியன் சுற்றுப் பயணம்

★

திட்டக்குடி :

திட்டக்குடி, ஆக. 9— இவ்வூர் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று, நேற்று மாலை, பெரிய கோவிலுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் கூட்டப் பெற்றது. சுற்றுப்புற சிற்றூர் பேரூர்களிலிருந்து ஏராளமான மக்கள் கூட்டத்தைக் காண வேண்டும், கருத்துக்களைக் கேட்க வேண்டும் என்ற ஆவலோடு வந்து குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்கு மாணவக் கழகச் செயலாளர் தலைமை தாங்கினார். தலைவர் அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறிய பிறகு, விருதாசலம் வட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் பிச்சைமுத்து அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து, அந்தக் கொடி உணர்த்தி நிற்கும் இலட்சியங்களை எடுத்துரைத்தார்.

பின்னர் தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, மாணவர்கள் தங்கள் மாணவர் கழகத்தை, அரசியலை அறிந்து கொள்ளும் அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு வரவேண்டுமேயல்லாது, நேரடிப் போராட்டங்களில் கலந்து கொண்டு தங்கள் கல்வியைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது என்றும், தி. மா. மு கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் படிப்பு காலத்தில் படிப்பு பற்றிய எல்லா அறைகளிலும் முன்னணியில் இருக்கிறார்கள் என்ற செய்திதான் அண்ணா அவர்களை மகிழ்விக்கச் செய்யும் என்றும், மாணவர்கள் தங்களைக் காலத்திற்கேற்ற வகையில் தயார் படுத்திக் கொள்வதோடு முன்னேற்றக் கழகக் கருத்துக்களை ஓய்வு நேரத்தில், அமைதியான முறையில் பரப்பவும் முயல வேண்டும் என்றும் கூறினார். மேலும் கழகக் கொள்கைகள், திட்டங்கள் பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினை பற்றியும் பேசினார். கூட்டம் இரவு 9 மணிக்கு நிறுத்தப்பட வேண்டிய கட்டாய நிலை போலீஸ் லைசென்ஸ் முறையால் ஏற்பட்டதால், செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

கோதண்ட விளாகம் :

கோதண்டவிளாகம், ஆக. 10— நேற்று மாலை நடைபெற்ற தி மு கழகத் துவக்க விழாக் கூட்டத்தில், தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

கோதண்ட விளாகம் தெ. ஆ மாவட்டத்தைச் சேர்ந்த சேத்தியா தோப்புக்கு அருகிலுள்ள சிற்றூர் என்றாலும், பல்வேறு சிற்றூர் மக்களையும் ஈர்க்கக் கூடிய நிலைமையில், பொதுக் கூட்டம் அமைந்திருந்தது.

முதலில் பல தோழர்கள் இன்னிசை வழங்கினார்கள். தெ. ஆ மாவட்டச் செயலாளர் தோழர் பாலகுருசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள் பின்னர் சேத்தியா தோப்பு தி. மு க. செயலாளரும், தோழர் முருகேசன் அவர்களும் பேசினார்கள். அடுத்த தோழர் இரா. நெடுஞ்செழியன் தி மு. கழகத்தின் சமுதாயக் கொள்கைகளை விரிவாக எடுத்துரைத்தார். செயலாளர் நன்றி கூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிவுற்றது.

சன்னாநல்லூர் :

சன்னாநல்லூர், ஆக. 11— தஞ்சை மாவட்டம் நன்னிலம் புகை வண்டி நிலையத்தை அடுத்து விளங்கும் சன்னாநல்லூரில், வள்ளுவர் வாலிபர் கழகத்தின் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

பொதுக்கூட்டத்தைக் கூட்ட மாணவர்களும், இளைஞர்களும் பெரிதும் ஒத்துழைப்புக் கொடுத்து, அழகான முறையில் பந்தல் போட்டு மேடை அமைத்திருந்தனர். கூட்டத்திற்கு வள்ளுவர் வாலிபர் கழகத்தின் தலைவர் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினார்கள் தோழர்கள் நாகை பாண்டியன், கொரடாச்சேரி வைத்தியலிங்கம் ஆகியோர் வள்ளுவர் நெறி பற்றி அழகுறச் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது, வள்ளுவர் வாலிபர் கழகம் எவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களைப் பரப்பி வருகிறது என்பது பற்றியும், எவ்வாறு பரப்பி வர வேண்டும் என்பது பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வற்புறுத்தியும், திராவிட நாட்டிற்கு இந்தி மொழி எப்படி அவசியமில்லை என்பது பற்றியும் நீண்டநேரம் உரையாற்றினார். தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறக் கூட்டம் கலைவுற்றது.

இரவு 11 மணிக்கு வாலிபர் கழகத்தாரால் நடித்துக் காட்டப்பட்ட "மூன்று முத்தங்கள்" என்ற நாடகம் இனிது நடந்தேறியது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

(ந தி.)

63,934 மதுவிலக்கு வழக்குகள்

ரூ. 10 லட்சம் சர்க்காருக்கு 'வருமானம்'

1952—1953-ம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டம் தவிர்த்து ஏனைய சென்னை மாநிலத்தில் மொத்தம் 63,934 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வழக்காடப்பட்டது.

இதில் 3591 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த வழக்குகளில் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ 10,87,431 ஆகும்.

மதுவிலக்கை அமுல் செய்வதற்காக மதுவிலக்கு போலீஸ் நிர்வாகத்திற்கு மட்டும் போலீஸ் இலாகாவே, மதுவிலக்குச் சட்டத்தையும் மேற்பார்த்துக் கொள்ளும், ஆறு மாவட்டங்களுக்கான செலவு நீக்கி ரூ 63,82,714 ஆகும்.

இந்தத் தகவலை மதுவிலக்கு, மடாலய மந்திரி பி. பரமேஸ்வரன் சட்டசபையில் அறிவித்தார்.

பாகிஸ்தானுக்கு புதிய வெளிநாட்டு மந்திரி

பாகிஸ்தானின் தூதுவராக இப்போது அமெரிக்காவில் இருந்துவரும் மகமத் அம்ஜத்அலி பாகிஸ்தானின் வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்படக்கூடும் எனத் தெரிகிறது.

இப்போது வெளிநாட்டிலாகா மந்திரியாயுள்ள ஜபருல்லாகான் ராஜினாமா செய்துவிட்டு, சர்வதேச நீதி மன்றத்தில் இடம் பிடித்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளாராம்!

மிளகு சாகுபடி

நடப்பு ஆண்டில், மிளகு சாகுபடி விஸ்தீரணம் 2,08,000 ஏகராகவும், உற்பத்தி 22,300 டன்னுமாக இருக்குமென்று தெரியவருகிறது.

திருக்குறள் விழா

★

சென்னை

6—8—54 மாலை 4 மணிக்கு வண்ணையம்பதி கணபதி ஆரம்ப உயர்தரப் பாடசாலை மாணவர் தமிழ்க் கழக சார்பில் தோழர் கே. இராஜகோபாலன் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது. தோழர் ஏ. தாமோதரன் வரவேற்புரை யாற்றினார். தோழர் ஆறுமுகம் வள்ளுவர் வாழ்க்கை, நூலின் மாண்பு பற்றி பேசினார்.

புதுவண்ணை

சென்னை, புதுவண்ணை, திருவொற்றியூர் பெரியசாலை நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளி மாணவர் சங்கச் சார்பில் 'திருவள்ளுவர் விழா' 5—8—54 மாலை 3-30 மணியளவில் கொண்டாடப் பெற்றது.

திரு வி. சங்கரனார் தலைமை வகித்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். பாராட்டத்தகு முறையில் சொற்பொழிவாற்றிய மாணவருள் ஐவருக்கு 'திருக்குறள் மூலம்' என்னும் நூலை அன்பளிப்பாக வழங்கினார்.

சென்னை 50 வது வட்டம்

31—7—54 இரவு 7-30 மணியளவில் தி. மு. கழக மனையில் தோழர் சி. சுந்தர செழியன் தலைமையில் குறள் வார விழா கொண்டாடப்பட்டது. தலைவர் தலைமையுரையில், கத்தியுடன் இருக்கும் சீக்கியர்களைப் போல தமிழர்கள் திருக்குறளுடன் இருத்தல் வேண்டும் என்றும், குறளின் மேன்மைபற்றியும் பேசினார்.

பெங்களூர் — அக்கிப்பேட்டை

1—8—54 காலை, தி. மு கழகச் சார்பில், கழக மனையில் தோழர் உலகநாதன் தலைமையில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது. தோழர்கள் சி. என். சாமி, மா. ராமசாமி, இரா. அழகுவேலன், இளஞ்சேரன் சொற்பொழிவாற்றினர்.

பா. நா. புதூர்

3—8—54ம மாலை 6 மணியளவில் புதுமைப் படிப்பக இரவு பாடசாலையின் சார்பில் திருவள்ளுவர் விழா தோழர் பி. சேரலாதன் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழியர் மாணிக்கம் வள்ளுவர் பற்றி பேசிய பின்னர், தலைவர் 'வள்ளுவரும் குறளும்' என்பது பற்றி பேசினார்.

மதுரை—கோரிப்பாளையம்

31—7—54 இரவு 8 மணிக்கு இளைஞர் பகுத்தறிவு மன்ற கட்டிடத்தில் வள்ளுவர் விழா தோழர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஔவை து. நடராசன் "திருக்குறளும் நாமும்" என்னும் பொருள் பற்றி சொற்பெருக்காற்றினார்.

தாராவி—பம்பாய்

3—8—54 மாலை 7-30 மணியளவில் சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றச் சார்பில், வள்ளுவர்விழா தோழர் புத்தாசு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மா. இரா. குறள்தாசன், கே. எம் தர்மலிங்கம், நாஞ்சில் இராசாமணி, மா இரா. ஏ. ரெத்தினசாமி, வடலைக் குயில் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்,

கொண்டலாம்பட்டி

இவ்வூர் தி. மு. கழகத்தில் 2—8—54 மாலை 6 மணிக்கு திருவள பழனிசாமி தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது "குறள் நெறி" என்பது பற்றி தோழர்கள் கே. ஆர். வரதராசன், க. கண்ணுமலை, ஜி. கே மூர்த்தி, கே. வி பழனிசாமி, கே. என். அமிர்தம் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டு, இனிப்பு வழங்கப்பட்டது.

கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானா? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகப் பொதுச் செயலாளர் கூறியது தவறா? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில முன்னர் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

ஐயா,

ஜனநாயக முறையில் அரசாங்கம் இயங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டத்தின் பெயரால் ஜனாதிபதி, கவர்னர் என்ற பதவிகளும், அப்பதவிகள் வாழ மக்கள் வரிப்பணம் கொட்டப்படுவதும் இன்றைய அரசியலில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் உணர்ந்து வருந்தவேண்டியவற்றுள் ஒன்று.

கவர்னர் பதவி ஆட்சிக்கு அவசியமாக இருக்கலாம்; ஆனால் அத்தகைய பதவிக்கு இன்று அரசாங்கம் "சம்பளம்" என்ற பெயரால் அளிக்கும் தொகை மிக அதிகம். அதுமட்டுமல்ல, காங்கிரஸ் ஆட்சியில், அரசியல் அனுபவமோ, ஆட்சித் திறமையோ உடையவர்களுக்கு இந்தப் பதவி அளிக்கப்படவில்லை. சராசரி இந்தியனின் வருமானம் 10 ரூபாயாக இருக்கிறதே என்று ஜே. ஸி. குமரப்பா போன்றோர் வருந்தும்போது ஏறத்தாழ பத்து லட்சத்தை சென்னை கவர்னருக்கு அள்ளிக் கொடுப்பது அநீதி. கொடுமை, கொடுமை ஒழிக்கப்பட வேண்டும்

இளங்கோவன், திருவைகுண்டம்,

★

ஐயா,

சம்பளம், படி என்ற பெயரால் செய்யப்படும் வீண் செலவை உணர்த்தவும், தென்னாட்டின் செல்வத்தால் வடவர் உயருகின்றனர்—கொழுக்கின்றனர் என்ற பேதத்தையும் எடுத்தியம்பும் என்ற நம்பிக்கையுண்டு கவர்னர் சம்பளப் போராட்டத்தால்! அத்தகைய போராட்டத்தில் என் பங்கும் உண்டென்பதை தெரிவிக்கிறேன்.

நா. தமிழ்முத்து, அரியலூர்.

★

ஐயா,

கிராம மக்கள், கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் அவதியுறுகிறார்கள்; ஒரு சிறு கிராமப் பள்ளியைக் கட்ட பொருளாதார நெருக்கடி என்று சொல்லுகின்ற சமயத்திலே ஒரு நாளைக்கு கவர்னருக்கு ரூ 2758—5—4 தன்னை அறியாமல் கொடுப்பதை உணர்ந்து பார்க்கவேண்டும். ஆகையால், இந்த சம்பளத்தை குறைக்க உடனடியாக போராட்டம் தேவைதான்; என மனமார வரவேற்கிறேன்.

வே சண்முகம் தொளார்

★

ஐயா,

கஷ்டப்பட்டு சம்பாதித்து வரி பாகக் கொடுத்த பணம், கவர்னரின் சம்பளம் என்பதன் பெயரால் விரயமாகாமல் தடுக்க போராட்டம் அவசியமாகும்.

வாழ. சிவசுப்ரமண்யம் கரிசல்குளம்

★

ஐயா,

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் மிக மிக அவசியம் சீரும் சிறப்புமாயிருந்த திராவிடன் நான் பூராவும் வேலை செய்து ரூ 1 பெறுகிறேன். வடநாட்டிலிருந்து வந்த கவர்னருக்கு வருடத்திற்கு சுமார் 10—லட்சம். இதை பொறுக்க முடியாது;

எழில்வேலன் கல்லாவி

ஐயா,

கவர்னருக்கு ஆண்டொன்றுக்கு கொடுக்கப்படும் லட்சக்கணக்கான ரூபாய், இன்றைய நிலையில் அநியாயமானது; அவசியம் குறைக்கப்படவேண்டியது!

நம் இன எழுச்சி முழக்கத்தால் வறுமையில் வாடித் தள்ளாடி நிற்போரின் தளர்ச்சியுற்ற நரம்புகளிலெல்லாம் உணர்ச்சி ஏற்பட்டுள்ளன; எனவே, கொள்ளைச் சம்பளத்தைக் குறைக்க, ஓர் போர்ப்படை அமைத்து, போராட்டமும் கிளர்ச்சியும் நடத்தப்பட வேண்டியது அவசியம்; அவசரமும் கூட!

ம. சே. வெண்முகில், ம. சே. த மூர்த்தி, சென்னை.

★

ஐயா,

ஒரு தனிப்பட்ட மனிதருக்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் ரூபாயா? அந்தப் பணம் எல்லாம் பொது மக்களுடையதுதானே! கவர்னரால் நமக்கு ஒன்றும் பிரயோஜனமில்லையே!

நாட்டில் பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது; நிலைமை மாற போராட்டம் அவசியம் தேவை.

மா. பாலையா, இலங்கை.

★

ஐயா,

கவர்னரின் சம்பளத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக, அது ஒரு பகற்கொள்ளைதான், அதை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தவேண்டியதும் மிகவும் அவசியமே; அவசியமில்லை என்று கூறுவோர், கண்ணிருந்தும் குருடர்களே!

மு. நன்மாறன், திருச்சி.

★

ஐயா,

ஒரு தனி மனிதனுக்கு ஆண்டு தோறும் பத்து லட்சம் ரூபாய் சம்பளமாகக் கொட்டிக் கொடுப்பதை எந்த அறிவுள்ள மனிதனும் ஒத்துக் கொள்ளமாட்டான். அதிலும் பஞ்சமும், பசியும், கொடுமையும் நிறைந்த இந்நாட்டு மக்களின் வரிப் பணத்தைக் கொடுப்பதென்றால் அதை யார் தான் ஒப்புவர்?

அ குப்புசாமி, சென்னை.

★

ஐயா,

"போர்குறிப் போமே புகழ் குறிய காலம்" என்பதை ஏற்று போரிட அண்ணாவின் அருமை தம்பிகள் ஏராளம்! அஞ்சா நெஞ்சுகொண்டோருள்ள வீர இளைஞர்கள் ஏராளம்! "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்பதுபோல, தம்பிகள் தயார், கவர்னரின் கொள்ளைச் சம்பளத்தைக் குறைக்க!

இராவணன், ரூனி—சென்னை.

★

ஐயா!

கொலுப் பொம்மையான கவர்னருக்குக் கொள்ளைச் சம்பளம் கொடுக்கப்படக் கூடாது; குறைத்துத்தான் ஆகவேண்டும். ஆகவே, சம்பளக் குறைப்புப் போராட்டம் நடத்தினால், நாட்டின் நலனில் நாட்டம் கொண்டவர்களின் நல்லாதரவு நமக்குத்தான்!

மா. பொன்னுச்சாமி அறுப்புக்கோட்டை

'சீட்டோ' பேச்சு

நேரு மறுக்கிறார்

கொழும்பு, ஆக 12—

"இப்போதைய சூழ்நிலையில் 'சீட்டோ' பற்றி 'கொழும்பு அரசுகள்' கூடிப் பேசுவது விரும்பத்தகாத ஒன்றாகும்," என்று இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், இந்தோனேஷியப் பிரதமர் அலிசாஸ்ட்ராமிட்ஜாவும் இலங்கைப் பிரதமருக்கு தெரிவித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

"ஜூலையில் சௌகரியம் இல்லாவிடில் டில்லியில் 'கொழும்பு அரசு'கள் மாநாட்டை நடத்தலாம்," என்று யோசனை கூறிய கொத்தலாவலைக்கு பண்டித நேரு பதில் அளிக்கையில், 'சீட்டோ'விற்கு மாற்றுத் திட்டம் பற்றிப் பேச, 'கொழும்பு அரசு'களை தான், டில்லிக்கு மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகவும், ஆனால் இப்போது அக்கூட்டம் நடைபெற வேண்டுமென்பதைத்தான் நம்பவில்லை என்றும் பதில் அளித்திருக்கிறார் என்று தெரிகிறது.

★

இலங்கை மந்திரிசபை அங்கீகாரம்!

இதற்கிடையில், இலங்கை மந்திரி சபை, "செப்டம்பரில் மேற்கு வல்லரசுகள் நடத்தும் 'சீட்டோ' பேச்சுக்களில் கொத்தலாவலை கலந்து கொள்ளக் கூடாது," என்ற யோசனையை அங்கீகரித்திருக்கிறது

★

பாகிஸ்தான் முடிவு!

மேற்கத்திய வல்லரசுகள் பகுயோவில் செப்டம்பர் மாதம் நடத்தும் 'சீட்டோ' மாநாட்டில் கலந்துகொள்ள பாகிஸ்தான் முடிவு செய்திருக்கிறது.

தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு

மேற்கு நாடுகள் யோசனையை இலங்கையும் நிராகரிக்கிறது!

இலங்கை அரசாங்கம், இதர கொழும்பு நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், மேற்கத்திய வல்லரசுகள் தென்கிழக்காசியப் பாதுகாப்புக் கூட்டணி நிறுவுவது பற்றிப் பேசுவதற்காகக் கூட்டுகிற மாநாட்டில் தான் கலந்துகொள்ள விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ளதாம்.

ஏற்கனவே இந்தியா, அந்தக் கூட்டணியில் கலந்து கொள்ள மறுத்து, 'சீட்டோ' என்ற ஏற்பாட்டிற்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஒன்றைத் தந்து, மேற்கு வல்லரசுகளைத் திகைக்கச் செய்ததும் ஞாபகமிருக்கலாம்.

இலங்கையின் இந்த முடிவு, பிரிட்டிஷ், அமெரிக்க ஆட்சியாளர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தரக்கூடும்.

இந்திய யூனியனில் சுங்க வருமானம்

1954 மே மாதத்தில் இந்தியாவில், கடல், தரை, சுங்க வருமானம் மூலம் மொத்தம் 1241 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டது.

மொத்தம் வசூலிக்கப்பட்ட சுங்க வருமானத்தில், இறக்குமதித் தீர்வைகள் மூலம் கிடைத்தது 993 லட்ச ரூபாய்; ஏற்றுமதித் தீர்வைகள் மூலம் கிடைத்தது 195 லட்ச ரூபாய்; தரைச் சுங்கம் மூலமும், பிற வகைகளிலும் கிடைத்தது 26 லட்ச ரூபாய்

யூனியன் எக்ஸைஸ் தீர்வை மூலம் மொத்தம் வசூலாகியது 649 லட்ச ரூபாய்.

கழகக் கூட்டங்கள்

★

மாப்பிள்ளை ஊரணி

தி. மு. கழக திறப்புவிழா

15—8—54 ஞாயிறு மாலை

தலைவர்: தோம்மைமைக்லேஸ்

திறப்பாளர்: கே. வி. கே. சாமி

அண்ணா படத் திறப்பு: எம். எஸ். சிவசாமி

பேசுவோர்:

இரே இளம்வழுதி

கே. பி. ராமலிங்கம், எம். சி.

ஆ. வேலாயுதம்

எஸ். வி. பாண்டியன்

★

மதுரை

கோரிப்பாளையம் சிங்காரவேலர் நினைவுப் படிப்பக சார்பாக

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

விக்டோரியா எட்வர்ட் ஹாலில்

15—8—54 காலை 9 மணிக்கு

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

பொருள்: 'விதேலை விழா'

எம். முகமது குழுவினரின் இன்னிசை விருந்தும் நடைபெறும்.

★

கரூர்

19-வது வார்டு தி. மு. க. சார்பில்

பஸ் ஸ்டாண்டுக்கு வடபுரம் பன்னீர்செல்வம் திடலில்

15—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. ஏ முருகேசனார்

பேசுவோர்:

தில்லை-வில்லாளன்

பி. எம். நாவரசன்

* * *

இரவு 8 மணிக்குமேல் கருணாநிதி நாடகமன்றத்தாரால் 'நச்சுக்கோப்பை' என்னும் நாடகம் நடைபெறும்.

★

திருவள்ளூர்

தர்கா மைதானத்தில்

15—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: டி. ஆர். அபூபக்கர்

பேசுவோர்:

எம். கே. ஜீ சாமி

பி. நாராயணன்

கே ஆர். சொக்கலிங்கம்

டி. எத்திராஜ்

டி. ஆர். வரதன்

ஆரணியில்

தி மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை

★

14—8—54 மாலை 6 மணிக்கு ஆரணி, கோசப்பாளையம் தர்மராசா கோயில் எதிரில் தி மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர் அண்ணாதுரை சொற்பொழிவாற்றுவார்.

* * *

நகர மன்ற வரவேற்பும் திரு வி. க. படத்திறப்பும்

14—8—54 மாலை 5 மணிக்கு ஆரணி நகர் மன்றத்தில் தோழர் அண்ணாதுரை அவர்களால் மறைந்த தமிழ்த் தென்றல் திரு வி. க. அவர்கள் படத் திறப்பும், தோழர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்பும் நடைபெறும்.

திருமணம்

★

16—8—54 திங்கள் காலை 8-30 மணியளவில் தோழர் மு. கிருட்டிணன்—தோழியர் பெ. துளசிபாய் திருமணம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் என். வி. நடராசன், கே. எம். கண்ணபிரான், மற்றும் பலர் பாராட்டுரை வழங்குவர்.

இடம்:—சென்னை, சூளை, கலியாண மேன்திரி தோட்டம், (கான்ரான்ஸ்மித் நகர் மைதானம் எதிரில்.)

கள்ளக்குறிச்சி தாலுக்கா

தமிழ் நாடு உழவர் கட்சி மாநாடு

15—8—54 ஞாயிறு அன்று கள்ளக்குறிச்சியில் நடைபெறும்

பேசுவோர்:

வி. கோபால கவுண்டர், எம். எல். ஏ

திருக்குறளார் - வீ முனுசாமி, எம். பி.

ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ.

எம். பி சுப்ரமணியம், ,,

சிற்றரசு-சுப்ரமணியம்

உறையூர் தி. மு. கழக உறுப்பினர்கட்கு

15—8—54 இரவு 8 மணிக்கு பொதுக் குழுக் கூட்டம் கழகப் பணி மனையில் நடைபெறும் அதுபோது கூட்ட வரவு-செலவு கணக்கு பார்க்கப்படும்.

சொற் பயிற்சிக் கூட்டம்

14—8—54 இரவு 8 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி மு. க மனையில் 'மதமும் கடவுளும்' என்பது பற்றி தோழர் பே. ரத்தினவேலு தலைமையில் நடைபெறும்.

• • •

15—8—54 காலை 10 மணியளவில், சென்னை, சாலை விநாயகர் கோவில் தெரு முத்தமிழ் மன்றத்தில், தோழர் டி. கோவிந்தன் தலைமையில் 'சமதர்மம்' என்ற பொருள் பற்றி பல தோழர்கள் பேசுவார்கள்.

சொற் பயிற்சி வகுப்பு

15—8—54 மாலை 2 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில் தோழர் கு மணி தலைமையில் 'உலக அரங்கிலே' என்ற தலைப்பில் சொற் பயிற்சி வகுப்பு நடைபெறும்.

திருவள்ளுவர் தினம்

15—8—54 காலை 9½ மணிக்கு சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை தமிழர் மறுமலர்ச்சி மன்றச் சார்பில், சைவ ஆரம்பப் பாடசாலையில், மயிலை சிவமுத்து தலைமையில் 'திருவள்ளுவர் தினம்' கொண்டாடப்படும். தோழர்கள் அன்பு பழனி, த. சிவசிதம்பரம், கணேச பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

தல்லாகுளம் கைவல்யம் நினைவுப் படிப்பக உறுப்பினர் கூட்டம்

15—8—54 ஞாயிறு அன்று மதுரை, தல்லாகுளத்தில் கைவல்யம் நினைவு படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் ராசு தலைமையில் நடைபெறும். அதுசமயம் முதலாவது ஆண்டு விழா நடத்துவது குறித்து பேசப்படும்.

கடுகு சாகுபடி

நடப்பு ஆண்டில் கடுகு சாகுபடி விஸ்தீரணம் 53,73,000 ஏகராக்களும், உற்பத்தி அளவு 8,26,000 டன்னுமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

★★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

21, 22—8—1954-ந் தேதிகளில், காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெறும்

21—8—54 சனிக்கிழமை:	22—8—54 ஞாயிற்றுக்கிழமை:
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்	தலைவர்: இரா. சு. தங்கப்பழம்
துவக்குபவர்: எம். ஜி. ராமச்சந்திரன்	துவக்குபவர்: எம். எஸ். மணி

பொதுச்செயலாளர் அண்ணாதுரையும்—எல்லா கழகத் தோழர்களும் கலந்துகொள்வர்

சனி இரவு: 'சந்திரமோகன்' ★ ஞாயிறு இரவு: 'அம்மையப்பன்'

என் எஸ். ராசேந்திரன், டி வி. நாராயணசாமி, எம். ஆர். சாமிநாதன். எம் என். கிருஷ்ணன், தேட்சணாமூர்த்தி, ஜி சகுந்தலா முதலியோர் நடிக்கும் நாடகங்கள் நடைபெறும்.

கட்டணம்:—வ குழு ரூ 5; பிரதிநிதி ரூ 3; ஆதரவாளர் ரூ. 2; பார்வையாளர் ரூ 1. பெண்களுக்கு அணா 8.

★★

திரு—தமிழர் அறப்போர்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறப்போரைத் தற்காலிகமாக நிறுத்தவேண்டுமென்ற கோரிக்கை செங்கோட்டையில் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

அமைதியாக இருக்குமாறு மக்களுக்கு தோழர் நேசமணி வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கிறார். நாகர்கோவிலில் முனிசிபல் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் மாணவர்களை ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாமென்றும், வகுப்புகளுக்குச் செல்லுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் நடவடிக்கை கமிட்டியின் அறிவுறுத்தலுக்கிணங்க, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தோழர் சாந்திராமன் இன்று மாலை உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என்று தோழர் நேசமணி கூறினார்.

★

"கட்ஜூவை அனுப்புக!"

டில்லி தலையிட கோரிக்கை

திருவாங்கூர் முன்னாள் அமைச்சரும், இப்போது திருக்கொச்சி கிராம டைரக்டருமான தோழர் ஜி. ராமச்சந்திரன், திருவாங்கூர் தமிழர் பிரச்சினைக்காக உடனே மத்திய சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

மத்திய சர்க்கார் அமைச்சரான டாக்டர் கட்ஜூவைப் போன்ற ஒருவர் உடனே அங்கு சென்று, சம்மந்தப்பட்ட கட்சிகளுடன் கலந்து கொண்டு அவர்களுக்கு நல்லமுறையில் உதவி அளிக்க வேண்டுமென்று அவர் மேலும் கூறியுள்ளார்.

15 ஆண்டுகளில் இந்தி தேசிய மொழியாகுமா?

ஆசாத் சந்தேகம்!

புதுடில்லி ஆக 12—

"அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தி மொழியைப் பரப்ப ஆவன செய்யவேண்டும்; அப்போதுதான் இந்தி குறிப்பிட்ட 15 ஆண்டு காலத்திற்குள் தேசிய மொழியின் இடத்தைப் பெற முடியும்; ஆகவே, இந்தி மொழி பெரும்பான்மையாக பேசப்படாத இடங்களில் இந்தியைப் பரப்ப தீவிர ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்" என்று, இந்திய சர்க்கார் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் இராஜ்ய கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

இந்தியைப் பரப்புவதற்காக இராஜ்ய சர்க்கார்கள் செய்துள்ள ஏற்பாடுகளை அவர் பாராட்டினார்.

இந்த மாநாட்டில் சென்னை, மே. வங்க அமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இந்த சர்க்கார்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திராவிட நான்கேந்தும் கழகத் அமைப்பாளர் தோழர் இராஜேந்திரன் இசுறுயன், எம். ஏ. அக்காளாள், ஆறுமுகம் அக்கிடம் கேற்க (தோ. நாராயண செட்டித் தெரு, திராவிடபுரம்) கொண்டு விட்டிருக்கிறது. ஆசிரியர்: இ. சுந்தரமூர்த்தி, ஈஷ